## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *03/04/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை

### ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கருத்தாழம் மிக்க அறிவுரைகளின் ஒளியில் இறைவனின் ஏகத்துவம் பற்றிய ஈமானை வலுப்படுத்தும் நினைவுகூர்தல்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

إِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

தவ்ஹீதை உலகில் நிலைநாட்டுவது குறித்து மாநபி (ஸல்) அவர்களின் வேதனை, முயற்சி, துணிச்சல், இணைவைப்பின் எல்லா அம்சத்துக்கு எதிராகவும் ஓர் உறுதியான பாறையைப் போன்று நின்று விடுதல் மற்றும் ஒவ்வோர் இனத்தின் இணைவைப்பின் சிந்தனைகளுக்கு எதிராகவும் நிற்றல் மற்றும் உண்மையைக் கூறுதல் குறித்து நாம் முதலில் படித்து வந்தோம்.

இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “ஆயிரக்கணக்கான இடர்கள் உருவான போதும், லட்சக்கணக்கான எதிரிகளும், இடையூறு விளைவிப்பவர்களும், அச்சுறுத்துபவர்களும் திரண்டு நின்ற போதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு உறுதிப்பாட்டுடன் தமது நபித்துவ வாதத்தில், துவக்கம் முதல் இறுதி மூச்சு வரை, உறுதியாக நிலைத்து நின்றார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களின் வெளிப்படைத்தன்மை எத்தகையது எனில், அன்னார் தவ்ஹீதை அறிவுறுத்தி, இணைவைப்பில் மூழ்கிக்கிடந்த எல்லா இனங்களையும், பிரிவுகளையும், ஒட்டுமொத்த உலக மக்களையும் எதிரிகளாக்கிக் கொண்டார்கள்.....

சிந்தித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே நேரத்தில் தம்மவர்கள், அந்நியர்கள் என **அனைவரையும் பகைத்துக் கொள்வதும்;** தவ்ஹீதைக் காட்டிலும் அதிகம் வெறுக்கத் தக்கதாக வேறெதுவும் இல்லாத அந்த நாள்களில், (தவ்ஹீதான) அதன் காரணமாகவே நூற்றுக்கணக்கான சிரமங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருந்த அந்தக் காலத்தில், உயிருக்கே ஆபத்து இருந்துவந்த அந்த நிலையில், அன்னார் **அ(ந்தத் தவ்ஹீ)தை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்வதும் எந்த உலகியல் ஆதாயத்துக்காக செய்யப்பட்டது?”**

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:** "இதுதவிர, நபி (ஸல்) அவர்கள் தோன்றிய அந்தக் காலத்தின் அந்த நிலைமைகளை அறிவாளி மனிதர் ஆழமாக ஆராய்ந்து பார்த்திட வேண்டும். அப்பொழுது, உண்மையில், மேன்மையான, மகத்தான இறை சீர்திருத்தவாதி மற்றும் விண்ணின் வழிகாட்டி ஒருவரின் மிகக்கடுமையான தேவை இருந்த ஒரு காலமாக, அதன் அப்போதைய நிலைமை இருந்தது. வழங்கப்பட்ட போதனைகளும் நிஜமாகவே உண்மையான, தூய்மையான மற்றும் மிக மிகத் தேவையான போதனைகளாக இருந்தன."

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "ஈடேற்றத்தின் அச்சான தவ்ஹீத், எந்த இறைமறையின் மூலமாக உலகில் அனைத்தையும் விட அதிகமாகப் பரவியது?..... யாராவது செல்லுங்களேன்! பைபிள் மூலம் ஓரிறைக் கொள்கை உலகத்தில் பரவியதா? கிறிஸ்தவர்களின் போதனைகளே மூன்று கடவுள்களைச் சார்ந்துள்ளன. அவர்களால் எப்படி தவ்ஹீதைப் பறைசாற்ற முடியும்? (அவர்களுடைய) கற்பனை சொர்க்கம் ஐரோப்பாவின் இரு பெரும் இனங்களான ஆங்கிலேயர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் பாதி பாதியாகப் பிரித்துக் கொடுக்கப்படுமாம்." இப்பொழுது அதிலும் இன்னும் பெரிய நாடுகளும் பிரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கர்களும் சொல்கிறார்கள்; சொல்லப்போனால், அமெரிக்க அதிபர் டிரம்ப் (ஈஸா) மஸீஹ் அவர்களின் இரண்டாம் வருகை என்ற அளவுக்கு சொல்லப்படுகிறது - இன்னா லில்லாஹ்!

"மேலும், தவ்ஹீத்வாதிகள் நெருப்பில் இடப்படுவார்களாம்.

இன்று உலகப் பரப்பில் தவ்ஹீத் என்று அழைக்கப்படுவது, மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தைத் தவிர, வேறு எந்தப் பிரிவினரிடமும் காணப்படுவதில்லை. மேலும், திருக்குர்ஆனைத் தவிர, கோடிக்கணக்கான படைபினங்களை இறைவனின் ஏகத்துவத்தில் நிலைநிறுத்தி, மிகவும் கண்ணியத்துடன் அந்த உண்மையான இறைவனை நோக்கி வழிநடத்தும் அடையாளம், வேறு எந்த (இறை)மறையிலும் கிடைப்பதில்லை. ஒவ்வோர் இனத்தவரும் தமக்கென ஒரு செயற்கை கடவுளை உருவாக்கிக் கொண்டனர். ஆனால், தொன்று தொட்டே அழியாதவனும், மாறாதவனும், தொடக்கமற்ற தன்னுடைய பண்புகளில் முன்பு இருந்தது போன்றே இருப்பவனுமான அவனே முஸ்லிம்களின் இறைவனாவான்."

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** மாநபி (ஸல்) அவர்கள் எத்தகைய காலத்தில் தோன்றினார்கள் என்றால், அப்பொழுது முழு உலகிலும், ஷிர்க், வழிகேடு மற்றும் படைப்பின வழிபாடு பரவியிருந்த நேரம் அது. எல்லா மக்களும் உண்மையான கொள்கைகளைக் கைவிட்டிருந்தார்கள். நேரான பாதையை மறந்துவிட்டு ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியான பித்அத்களின் வழிகளை மேற்கொண்டிருந்தார்கள்.

அரேபியாவில், சிலை வணக்கம் உச்சத்தில் இருந்தது. பாரசீகத்தில், நெருப்பு வழிபாடு தீவிரமாக இருந்தது. இந்தியாவில், சிலை வணக்கம் மட்டுமின்றி, இன்னும் நூற்றுக்கணக்கான படைப்பின வழிபாடுகள் பரவியிருந்தன. எனவே, இத்தகைய பொதுவான வழிகேட்டின் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் **இறைவன் புறமிருந்து அனுப்பப்படுவதும்;** அப்பொழுது அக்காலத்தின் அன்றைய சூழல் ஒரு மாபெரும் மருத்துவரை, சீர்திருத்தவாதியை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தபோது, இறைவனின் வழிகாட்டுதலுக்கு உச்சகட்ட தேவை இருந்தபோது, இத்தகைய நிலையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றி **ஓர் உலகையே தவ்ஹீத் மற்றும் நற்செயல்களால் ஒளிரச் செய்வதும்;** தீமைகளின் தலையூற்றான **ஷிர்க்கையும், படைப்பின வழிபாட்டையும் வேரறுப்பதும்,** மாநபி (ஸல்) அவர்கள் இறைவனின் **உண்மையான தூதர் ஆவார்கள்** என்பதற்கும், அன்னார் **தூதர்கள் அனைவரைக் காட்டிலும் மேலானவர் ஆவார்கள்** என்பதற்கும் தெளிவான சான்றாகும்.

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** மக்கள் இறைவழியை மறந்து விட்டு, ஓரிறைவனை வணங்குவதைக் கைவிடும்போது, எந்தஅளவு சீர்கேடு ஏற்பட்டிருக்கிறதோ அதை சீர்திருத்துவதற்காக, மேலான இறைவன் தன் புறமிருந்து யாரேனும் ஓர் அடியாருக்கு முழுமையான அகப்பார்வை வழங்கி, தன்னுடன் உரையாடுதல் மற்றும் இல்ஹாம் பெறுதல் எனும் கண்ணியத்தை அளித்து, ஆதமின் வழித்தோன்றல்களின் நேர்வழிக்காக அனுப்புகிறான். இதிலுள்ள மெய்யான உண்மைத்துவமாவது, எவனுடைய துணையால், எவனுடைய சார்பில், உலகம் உருவானதோ, நிலைத்திருக்கிறதோ, கையூம் எனப்படும் உலகை நிலைபெறச் செய்திருக்கும் அந்தப் படைப்பாளன், அருள் பொழியும் தனது எந்தவொரு பண்பையும் படைப்பினத்தை விட்டும் விலக்கி வைப்பதும் இல்லை; வீணானதாகவும், பயனற்றதாகவும் விடுவதும் இல்லை. மாறாக, அவனுடைய ஒவ்வொரு பண்பும் அந்தந்தத் தருணத்தில் உடனடியாக வெளிப்பட்டு விடுகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பிறகு, இந்தக் காலத்தில் நாம் பார்க்கிறோம்! அல்லாஹ் தன் வாக்குறுதிகளுக்கு ஏற்ப, மாநபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் அவர்களைத் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகத் தன்புறமிருந்து அனுப்பினான். இந்தக் காலத்தில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ (அலை) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் போதனை மற்றும் சுன்னத்தின் செயல் வடிவமாகத் திகழ்ந்தார்கள். மேலும், தம் எஜமானர் அவர்களைப் பின்பற்றியவாறு, அல்லாஹ்வின் தவ்ஹீதைப் பரப்புவதற்காக அன்னாரது உள்ளமே ஒரு

வேதனையால் நிரம்பியிருந்தது. அதன்படி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய படைப்புகளிலும், அன்னாருடைய செயல் வடிவ வாழ்விலும் இதற்கான பல எடுத்துக்காட்டுகள் நமக்குத் தென்படுகின்றன. அவற்றில் சிலவற்றை நான் எடுத்துரைக்கிறேன்.

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ்வுக்கு எம்முடனான தொடர்பு வியப்பிற்குரியது! أَنْتَ مِنِّیْ بِمَنْزِلَةِ تَوْحِيْدِیْ وَتَفْرِيْدِیْ என்ற எமக்கு வந்த இல்ஹாம், ஒரு புதிய வகையான இல்ஹாம் ஆகும். நாம் இதற்கு முன்னர் எந்த இல்ஹாமிய சொற்றொடரிலும் இதுபோன்ற சொற்களைக் கண்டதில்லை. எமது சிந்தையில் வரக்கூடிய இதற்கான பொருள் இதுவாகும்: உலகில் இறைவனின் ஏகத்துவம் மிக மிக அதிகமாக அவமதிக்கப்பட்டு, மிகவும் இழிவாகப் பார்க்கப்படும் பொழுது, அத்தகைய காலத்தில் இறைவன் புறமிருந்து வருகின்ற நபர் தவ்ஹீத் எனும் இடத்திலேயே இருக்கிறார். இத்தகைய நபர் தவ்ஹீதின் மொத்த உருவமாக இருக்கிறார்.

**ஷிர்க் மற்றும் அதன் நுணுக்கமான வகைகளைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒவ்வொரு வகையான ஷிர்க்கிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும். சூரியன், சந்திரன், வானிலுள்ள விண்மீன்கள், காற்று, நெருப்பு, தண்ணீர் மற்றும் பூமியின் வேறு எந்தப் பொருளையும் வணக்கத்திற்குரியதாக ஆக்கக்கூடாது. உலகத்தின் காரணிகளுக்கும், அவை இறைவனுக்கு இணையானவை என்பது போன்ற கண்ணியமும் அளிக்கக்கூடாது; அந்த அளவுக்கு அவற்றை நம்பவும் கூடாது. தனது துணிச்சல் மற்றும் முயற்சியையும்கூட ஒரு பொருட்டாகக் கருதக்கூடாது. ஏனெனில், இதுவும் ஷிர்க்கின் வகைகளில் ஒன்றாகும். மாறாக, அனைத்தையும் செய்து விட்டு, நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று கருத வேண்டும். தனது அறிவின் மீதும் இறுமாப்பு ஏதும் கொள்ளக்கூடாது; தனது செயலின் மீதும் பெருமிதப்படக்கூடாது. மாறாக, உண்மையில், தன்னை அறிவீனனாகக் கருத வேண்டும். சோம்பேறியாகக் கருத வேண்டும். ஆன்மா எந்நேரமும் இறைவனுக்கு முன்னால் விழுந்து கிடக்க வேண்டும். மனிதனின் அறிவு ஒரு ஆசிரியரின் தேவையுடையதாகவும், அளவிற்குட்பட்டதாகவும் இருக்கிறது. ஆனால், அவனுடைய (அதாவது, இறைவனுடைய) அறிவோ எந்த ஆசிரியரின் தேவையும் அற்றது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* தற்காலத்தின் தாக்கத்திற்குட்பட்டு, சிலவேளை பிள்ளைகளிடமும், ‘அல்லாஹ்வைப் படைத்தது யார்? அல்லாஹ் எங்கிருந்து வந்தான்?’ என்ற கேள்விகள் எழுகின்றன. அவர்கள் எழுதிக் கெண்டே இருக்கிறார்கள். பெரியவர்கள் அவர்களுக்குக் கூறுவார்கள் போல. அல்லது சுயமே அவர்களுடைய

சிந்தனையில் கேள்விகள் எழுகின்றன. ஆனால், அல்லாஹ்வின் பண்புகள் எத்தகையவை எனில், அல்லாஹ் தொடக்கமும் முடிவும் இல்லாதவனாவான்; எல்லையற்றவன் ஆவான். எனவே, அவனே அனைத்தையும் படைத்தான். அவனை எவரும் படைக்கவில்லை. தானாகவே உருவானது என்று இறுதியான எந்தப் பொருளைப் பற்றி ஒரு கற்பனை உருவாக முடியுமோ அது இறைவனே!

இறைவனை அவனுக்கு இணையாக்கப்படுகின்ற அனைத்திலிருந்தும், அது சிலை, மனிதன், சூரியன், சந்திரன் என எதுவானாலும் சரி, அல்லது தனது ஆன்மா, திட்டம், சூழ்ச்சி மற்றும் வஞ்சகம் என எதுவானாலும் சரி, ஆகிய அனைத்தையும் விட்டும் தூயவனாகக் கருதுவது மற்றும் அவனுக்கு நிகராக வேறெவரையும் வல்லமையுள்ளவராகக் கருதாமல் இருப்பது, வாழ்வாதாரத்தை வழங்குபவராக ஏற்காமல் இருப்பது, கண்ணியம் வழங்குபவராகவும், இழிவடையச் செய்பவராகவும் கருதாமல் இருப்பது மற்றும் உதவி, ஒத்தாசை செய்பவராகவும் ஏற்காமலிருப்பது ஆகிய இந்த உண்மையான ஏகத்துவத்தைத்தான் நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று இறைவன் நம்மிடம் நாடுகின்றான். மேலும், இதை ஏற்பதிலேயே ஈடேற்றம் உள்ளது. இரண்டாவது, அவன் மீது மட்டுமே நாம் பேரன்பு கொள்ள வேண்டும். அவனை மட்டுமே வணங்க வேண்டும். அவனிடம் மட்டுமே நமது எதிர்ப்பார்ப்பை வைக்க வேண்டும். அவனுக்கு மட்டுமே அஞ்ச வேண்டும்.

எனவே, இம்மூன்று வகையான (இறைவனுக்கே) உரித்தாக்குதல் இல்லாத எதுவும் முழுமையான தவ்ஹீத் ஆக முடியாது.

**முதலாவது** இருப்பின் அடிப்படையில் தவ்ஹீத். (உலகில்) இருக்கின்ற அனைத்தையும் இல்லாதவை போன்று கருதுவது. **இரண்டாவது** பண்புகளின் அடிப்படையில் தவ்ஹீத். அதாவது, படைத்துப் பரிபாலித்தல் மற்றும் இறைதன்மை ஆகிய பண்புகளை (மூலப் பொருளின்றி படைத்தவனான) இறைவனைத் தவிர வேறெவரிடமும் இருப்பதாகக் கருதாமல் இருப்பது. **மூன்றாவது** தனது நேசம், உண்மை மற்றும் உளத்தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில் தவ்ஹீத். அதாவது, பேரன்பு போன்ற இறைவணக்க வழிமுறைகளில் மற்றெவரையும் இணையாக்காமல் இருத்தல் மற்றும் அவனுள்ளேயே தன்னை மாய்த்துக் கொள்ளுதல் ஆகியவையாகும்.

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஓர் எளிய மனிதர் இறைவன் ஆக்கப்படுகிறார் எனும் இந்த இட்டுக்கட்டுதலால் வானம் பிளந்து விட இருக்கிறது என்று இறைவன் திருக்குர்ஆனில் உண்மையைக் கூறியுள்ளான். இந்த வேதனையால் என் நிலை எப்படி ஆகிறது என்றால், மற்ற மக்கள் சொர்க்கத்தை வேண்டுகிறார்கள் எனில், நான் என் வாழ்நாளில் இந்த இணைவைப்பிலிருந்து மனிதர்கள் விடுபடுவதையும், இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதையும் பார்ப்பதுதான் எனக்கு சொர்க்கம் ஆகும். எனது ஆன்மா

எந்நேரமும், ‘இறைவா! நான் உன் புறமிருந்து இருக்கிறேன் என்றால், உனது அருளின் நிழல் என்னுடன் இருக்கிறது என்றால், நவூதுபில்லாஹ், ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் என வாதம் புரிந்தார்கள் என்ற இந்தப் பழி அவர்களின் தலையிலிருந்து அகற்றப்படும் அந்த நாளை எனக்குக் காட்டுவாயாக.

நான் ஒரு நீண்ட காலமாக ஐவேளையும் பின்வரும் துஆக்களையே செய்து வருகிறேன்: இறைவன் அந்த மக்களுக்குக் கண்களை அருள்வானாக! அவர்கள் அவனது ஓரிறைமையின் மீது ஈமான் கொள்வார்களாக! அவனுடைய தூதரை அடையாளம் கண்டு கொள்வார்களாக! முத்தெய்வக் கொள்கையை விட்டும் தவ்பா செய்வார்களாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* செயல்ரீதியாகவோ கிறிஸ்துவம் அழிந்து வருகிறது. முக்கடவுள் கண்ணோட்டமோ இப்பொழுது அவர்களுக்கு வெறும் நூல்களிலுள்ள கண்ணோட்டமாக ஆகி விட்டது. அவற்றை செயல்படுத்துபவர்கள் மிகக் குறைந்தவர்களே. குறிப்பாக, ஐரோப்பாவில், ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால், முக்கடவுள் கொள்கையை விடுபவர்களும் ஓரிறைவனை ஏற்பதில்லை. எனவே, தவ்ஹீதில் நிலைபெறச் செய்வதற்கு நாம் நம்மால் இயன்ற அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் எந்த நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக அன்னாரை அனுப்பினானோ எந்தத் தவ்ஹீதின் போதனையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவித்தார்களோ அந்த உண்மையான தவ்ஹீதின்படி நாம் அமலும் செய்வோமாக! அதை உலகில் பரப்பவும் செய்வோமாக! ஏனெனில், இப்பொழுது உலகம் நிலைத்திருப்பதற்கு இது ஒன்றே தீர்வாகும்.

*குத்பாவின் முடிவில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஸியால்கோட் மாவட்டத்தின் முன்னாள் அமீர்,* ***மதிப்பிற்குரிய ஃஹாஜா ஸஃபர் அஹ்மத் சாஹிப்*** *அவர்கள் மற்றும் புர்கினாஃபாஸோவைச் சேர்ந்த* ***மதிப்பிற்குரிய இத்ராகோ அலீது சாஹிப்*** *அவர்கள் ஆகிய இருவரின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து மர்ஹூம்கள் இருவரின் பாவமன்னிப்பு மற்றும் அந்தஸ்த்தின் உயர்வுக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ،

عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ

لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**